# பொதுக்காலம் 32ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

"பெறுவதைவிட கொடுப்பதில்தான் மகிழ்ச்சி இருக்கிறது" என்பதை உணர்ந்தவர்களாய், திரு அவையோடு இணைந்து ஆண்டின் பொதுக்காலம் 32ஆம் ஞாயிறைச் சிறப்பிக்க அன்போடு அழைக்கின்றோம்.

உண்மையான ஆன்மீகத்தைக் குறித்து ஆழமாகச் சிந்திக்க இன்றைய இறைவார்த்தை வழிபாடு வழிவகுக்கிறது. தன்னை முன்னிறுத்திக் கொள்ளும் மறைநூல் அறிஞர்களும், தன்னிடம் இருப்பதையெல்லாம் எதையும் எதிர்பாராமல் இறைவனுக்குக் கொடுக்கும் ஏழைக் கைம்பெண்ணும் ஒருவருக்கொருவர் முரண்பட்டாலும், உண்மையான ஆன்மீகம் எது என்ற கேள்வி இவர்களை ஒரு புள்ளியில் இணைக்கிறது. இயேசு மக்களின் கவனத்தை ஈர்க்கும் வீண் முயற்சிகளில் ஈடுபடும் மறைநூல் அறிஞர்களைக் கண்டிக்கிறார். ஆனால் எந்த பலனையும் எதிர்பாராமல் தன்னிடம் உள்ளதை முழு உள்ளத்தோடு, தாராள மனத்தோடு காணிக்கை செலுத்திய கைம்பெண்ணை பாராட்டுகிறார். எனவே அன்பு சகோதரமே! "பெறுவதை விட கொடுத்தலே இன்பம்!". பிறரோடு நமக்குள்ளதைப் பகிர்ந்து வாழும் போது நமது மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. பகிர்வில் வரும் மகிழ்வில் நிலைக்கவும், கைம்பெண்ணைப் போலக் கடவுளுடைய வார்த்தையில் நம்பிக்கை கொண்டவர்களாய் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## முதல் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! காகங்கள் வழியாக எலியாவுக்கு உணவளித்து வந்த இறைவன் இப்போது சாரிபாத்து நகர் ஏழைக் கைம்பெண்ணிடம் அனுப்பு வைக்கிறார். "என்னிடம் உள்ளது இதுதான்" என்று இறைவனிடம் கொடுப்பவர்களுக்கு, அவர் இன்னும் அள்ளி அள்ளிக் கொடுக்கின்றார் என்பதை உணர்த்தும் அரசர்கள் முதல் நூலின் வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! இயேசுவைத் தனிப்பெரும் தலைமைக்குரு என்று அறிக்கையிட்ட புனித பவுல், பலி செலுத்துதல் என்ற அடிப்படையில் யூதர்களின் தலைமைக் குருவை விட இயேசு எப்படி மேம்பட்டு நிற்கிறார் என்பதையும், பலரின் பாவங்களைப் போக்கும் பொருட்டு, ஒரே ஒரு முறை இயேசு தம்மைத் தாமே பலியாக ஒப்புக் கொடுத்தார் என்று கூறும் எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. எங்கள் வாழ்வின் நிறைவாகிய இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு விழிப்புடன் காத்திருந்து, இறைமக்களை ஆன்மீக வழியில் நடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. சமாதானத்தின் ஊற்றே எம் இறைவா! எம் திருநாட்டில் வாழும் மக்கள் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். உண்மையான அன்பு கொண்டு

ஏற்றத்தாழ்வுகள் களைந்து ஒற்றுமையுடன் வாழத் தேவையான அருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. தாயாகத் தேற்றும் இறைவா! கொரோனா தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு, பல்வேறு இடங்களில் இருக்கும் மக்களை கண்ணோக்கிப் பார்த்து அவர்கள் தங்கள் நோயிலிருந்து விரைவில் குணமடைய உமது அருளைத் தந்திட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. நிலைவாழ்வின் ஊற்றே எம் இறைவா! எங்கள் குடும்பங்களில் மரித்தவர்கள் அனைவரையும், கொரோனா தொற்றுநோயால் இறந்தவர்களையும் நினைவுகூருகின்றோம். அவர்கள் அனைவரையும் உமது இறையரசில் சேர்த்து உம்மைப் போற்றிப் புகழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16


மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com